தால், கரும்பு விவசாயிகளிடமிருந்து வசூல் செய்வது அதிகாரமற்ற செயலாக இருக்கும். ஆகவே, என்ன செய்யவேண்டுமோ அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், திருநெல்வேலியிலிருந்து பக்கத்திலே ஒரு ஷுகர் பாக்டரிக்கு ரோடு இல்லை. செஸ் ஃபண்டை உபயோகித்து ரோடு போடுவது எப்படி என்று தெரியவில்லை. இது முக்கியமான ரோடு நேரடியாக, டவுனிலிருந்து ஷுகர் பாக்டரிக்கு என்ன காரணத்தால் ரோடு போடாமல் விடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திருநெல்வேலியில் ஏதாவது செஸ் ஃபண்டிலிருந்து சாலைக்குச் செலவு செய்ததாக என்னிடத்தில் குறிப்பு இல்லை. ஏனென்றால், நெல்லை மாவட்டத்தில் சர்க்கரை ஆலையே இல்லை. ஆனால், மதுரை மாவட்டத்தில் என்ன நடக்கிறது, எவ்வளவு வசூல் ஆகிறது, என்ன செலவு செய்யப் பட்டது என்பதைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், விடை சேகரித்துத் தரப்படும்.

New Cattle feed.

* 711 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether a new protein rich cattle feed by using urea and molasses has been developed in the Agricultural University at Coimbatore ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கம்பம் பகுதியில் உருளைக்கிழங்கு சாகுபடி

* 712 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கம்பம் பகுதியில் உருளைக்கிழங்கு சாகுபடியைப் பரப்பும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) கம்பம் பள்ளத்தாக்கில் சென்ற பருவத்தில், அதாவது ஐப்பசி மாதம்—குளிர் காலம் (அக்டோபரில்)—30 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டது. இந்த வருஷம் ஏறத்தாழ 200 ஏக்கர்கள் பயிர் செய்வதாக செயற் குறிப்பு உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, குளிர் காலத்தில் போட்ட காரணத்தாலோ என்னவோ அந்த உருளைக் கிழங்கு பயிர்கள் சரிவர வரவில்லையென்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அந்தத் திட்டம் பள்ளத்தாக்குப் பகுதியில் தோல்வி அடைந்ததாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: பலவகையான உருளைக் கிழங்குகள் அங்கே சாகுபடி செய்யப்பட்டன. இரண்டு வகைகள் நன்ருக வருகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஒன்றின் பெயர் இன்னென்றின் பெயர் 'President' 'Up to date' இந்த இரண்டு வகைகளையும் பயிர் செய்யலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. குளிர் காலத்தில்தான் பயிர் செய்யப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலே, கொடைக்கானல் பகுதியிலே உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டதே, அதை அங்கு வெற்றிகரமாகப் பயிரிட முடிகிறதா? தமிழகத்தில் எங்கெங்கு உருளைக்கிழங்கு வெற்றிகரமாகப் பயிரிடப்படுகிறது என்ற விவரத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: உருளைக்கிழங்கு பயிரிடுகின்ற பகுதிகளிலே குளிர் தேவை. குளிர் நேரத்தில்தான் மற்ற இடங்களில் பயிர் செய்ய முடியும். நீலகிரி மலையிலும் சரி, கொடைக் கானலிலும் சரி, ஏற்கெனவே பயிராகி வருகிறது. அது தவிர, சமவெளி பகுதியில் பயிரிட முடியுமா என்பது சோதனையில்தான் இருக்கிறது என்று சொன்னேன்.

திருநெல்வேலியில் வறட்சி நிவாரணப் பணிகள்

* 713 வினு—திரு. எம். முத்தையா. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்திற்கென அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?